மாதிரி வினாத்தாள்

செல் உயிரியல் (B) 1

11th Standard

**உயிரியல்**

Reg.No. :

I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

II. நீலம் மற்றும் கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கு பயன்படுத்த வேண்டும்.

Time : 01:30:00 Hrs

Total Marks : 55

## பகுதி - அ

10 x 1 = 10

1) தொடர்ந்து டி.என்.ஏ.வானது தூது ஆர்.என்.ஏ.வாக மாற்றப்படுவது இவ்வாறு அழைக்கப்படுகிறது.
(a) மொழிபெயர்ப்பு (b) புரதச் சேர்க்கை (c) DNA இரட்டித்தல் (d) படிஎடுத்தல்

2) ஒரு குறிப்பிட்ட சிறப்பான பணியைச் செய்வதற்காக வடிவத்தில் மாற்றம் பெறுதல் இவ்வாறு அழைக்கப்படுகிறது.
(a) வேறுபாடு அடைதல் (b) வளர்ச்சி (c) செல் பகுப்பு (d) செல் நீட்சி

3) செல் கொள்கைக்கு விதி விலக்கு..........
(a) பூஞ்சை (b) பிரையோ஁பைட்டு (c) விதைத் தாவரம் (d) டெரிடோ஁பைட்டு

4) எ.கோலை பாக்டீரியத்தில் காணப்படும் குரோமோசோம் அல்லாத டி.என்.ஏ. இவ்வாறு அழைக்கப்படுகிறது.
(a) மீசோசோம்கள் (b) நியூக்ளியாய்டு (c) இன்ஸிபியன்ட் நியூக்ளியஸ் (d) ப்ளாஸ்மிட்

5) ஃபேகோஸைட்டாஸிஸ்க்கு வேறு பெயர் ------.
(a) செல் விழுங்குதல் (b) செல் சாவு (c) செல் அருந்துதல் (d) செல் அழிவு

6) கூட்டு நுண்ணோக்கியை முதன் முதலில் உருவாக்கியவர் ...........
(a) கலிலியோ கலிலி (b) வான்லீவன் ஹாக் (c) பிரான்சிஸ் ஜேன்சென் மற்றும் சக்கரியாஸ் ஜேன்சென் (d) மார்செலோ மால்பிஜி

7) திசுக்களை கண்ணாடித் தட்டில் தயார் செய்யும்பொது பயன்படுத்தப்படும் ஊடகப் பொருள் .................
(a) போயின்ஸ் கரைசல் (b) பாரமால்டிஹைடு (c) கார்னாய்ஸ் திரவம் (d) கனடா பால்சம்

8) யூகேரியோட்டு செல்களில் கொழுப்பு அமிலங்களும் , அமினோ அமிலங்களும் இந்த செல் நுண்ணுறுப்பில் சிதைக்கப்படுகின்றன
(a) பெராக்ஸிசோம் (b) ரிபோசோம் (c) லைசோசோம் (d) பகங்கணிகம்

9) வட்ட DNA மூலக்கூறுகள் ........ காணப்படுகின்றன.
(a) சைட்டோபிளாசம் (b) உட்கரு (c) கோல்கை உறுப்பு (d) மைட்டோகாண்ட்ரியா

10) எண்டோபிளாச வலைப்பின்னலை முதலில் கண்டறிந்தவர் .........
(a) பாலடே (b) ராபர்ட்ஸ் (c) போர்ட்டர் (d) டேனியலி

## பகுதி - ஆ

10 x 2 = 20

11) செல் சுவரின் மூன்று முக்கிய பாகங்களைக் கூறுக.
12) PCD என்றால் என்ன?
13) வரையுற்ற குழி என்றால் என்ன?
14) செல் கொள்கையின் இரண்டு விதி விலக்குகள் யாவை?
15) எக்ஸ்டிரின்சிக் புரதங்கள் என்றால் என்ன?
16) கிராம் பாஸீட்டிவ் கிராம் நெகடிவ் பாக்டீரியா என்றல் என்ன ? உதாரணம் கொடு
17) ஒளி நுண்ணோக்கி மின்னணு நுண்ணொநோக்கியிலிருந்து எவ்வாறு வேறுபடுகிறது ?
18) சாயமேற்றுதலின் நோக்கம் என்ன?
19) செண்ட்ரியோல்களின் பணிகளைக் கூறு?
20) மேலிக்னென்ட் புற்றுநோய் என்றால் என்ன?

## பகுதி - இ

5 x 3 = 15

21) பிளாஸ்மோடெஸ்மேட்டா என்பது யாது?
22) குழிகள் என்றால் என்ன?அதன் வகைகளை விவரி.
23) செல்சுவரின் பணிகளை விவரி.
24) செல் சுழற்சியை விவரி.
25) தாவர செல்லின் படம் வரைந்து பாகங்களைக் குறி.

## பகுதி - ஈ

2 x 5 = 10

26) செல் கொள்கை தோன்றிய விதத்தை விவரி.
27) நுண்ணோக்கிகளின் தரம் வளர்ச்சியடைந்ததைப் பற்றி எழுதுக.

*******************************************

QB365 QUESTION BANK 365 https://www.qb365.in